

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.6.2025) தேனி மாவட்டம் வீரபாண்டி அண்ணாசாலை அங்கன்வாடி மையத்தில் பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங் உள்பட பல்வேறு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.6.2025) தேனி மாவட்டம் வீரபாண்டி அண்ணாசாலை அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுடன், அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் முன்பருவக் கல்வி குறித்து கலைந்துரையாடினார். இந்நிகழ்வில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜித்சிங், உள்பட பல்வேறு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தேனி மாவட்டம் வீரபாண்டி – அண்ணாசாலை

# அங்கன்வாடி மையத்தில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

## குழந்தைகள் – கர்ப்பிணித் தாய்மார்கள் – அங்கன்வாடிப் பணியாளர்களுடன் கலந்துரையாடினார்!

**தேனி, ஜூன் 17–**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேனி மாவட்டம் – வீரபாண்டி அண்ணாசாலை அங்கன்வாடி மையத்தில் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், கிராம சுகாதாரச் செவிலியர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுடன் கலந்துரையாடினார்**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.6.2025) தேனி மாவட்டம் வீரபாண்டி அண்ணாசாலை அங்கன்வாடி மையத்தில் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுடன் கலந்துரையாடினார்.

தேனி மாவட்டம், தேனி ஊரகம் வீரபாண்டி அண்ணாசாலை அங்கன்வாடி மையத்திற்கு சென்ற தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அங்கன்வாடியில் கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், அங்கன்வாடி குழந்தைகள் ஆகியோரிடம் கலந்துரையாடினார்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்து மாவு சரியாக வழங்கப்படுகின்றதா என்றும், அங்கன்வாடி குழந்தைகளுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளதா?, மதிய உணவு சரியாக வழங்கப்படுகின்றதா என்றும் கேட்டறிந்தார்.

குழந்தைகளின் உடல்நலம் குறித்து மருத்துவ குழுவினர் பரிசோதனை மேற்கொள்கின்றனரா, குழந்தைகளுக்கு பிறவி குறைபாடுகள் ஏதேனும் கண்டறியப்பட்டுள்ளதா என்றும் அங்கன்வாடி பணியாளரிடம் கேட்டறிந்தார்.

குழந்தைகளின் எடை, உயரம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றதா? என்றும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் முன்பருவக் கல்வி குறித்து கேட்டறிந்து, ஆய்வு மேற்கொண்டார். அங்கன்வாடி குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வரும் ஆடல், பாடலுடன் கூடிய முன்பருவக் கல்வி குறித்து குழந்தைகளுடன் கலந்துரையாடி, அவர்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பாடல்களை ஆடிக்கொண்டே பாடுதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து பாராட்டினார்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கர்ப்பகால மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவது குறித்து தாய் சேய் நல அட்டையில் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றும் ஆய்வு செய்தார். மேலும் அங்கன்வாடியில் சத்துமாவு, உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் இருப்பு குறித்து பதிவேடுகளை பார்வையிட்டும், குழந்தைகள் கழிப்பறை நன்றாக பராமரிக்கப்பட்டு வருகின்றதா என்றும் ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து பெற்ற கோரிக்கை மனுக்களுக்குத் தீர்வாக முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்ட அட்டைகளை 5 நபர்களுக்கும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2 நபர்களுக்கு சக்கர நாற்காலிகளையும், 2 நபர்களுக்கு தசை பயிற்சி செய்வதற்கான உபகரணங்களையும் (Standing Frame), வருவாய்த்துறையின் சார்பில் 1 நபருக்கு நலத்திட்ட உதவியும் என மொத்தம் 10 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன், திரு.ஆ.மகாராஜன், கே.எஸ்.சரவணக்குமார், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், உள்பட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### ‘கிளாட்’ தேர்வில் வெற்றி பெற்று– நாக்பூர் தேசிய சட்டப் பல்கலையில் பயில்வதற்குத் தேர்வு!

# “புதுமை pen” பெற்ற ”புதுமைப்பெண்” ராகிணி!

### வெற்றிகள் குவிக்க – பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வாழ்த்து!

சென்னை, ஏப்.17–

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் ‘எக்ஸ்’ தள பதிவு வருமாறு:

“CLAT தேர்வில் வெற்றி பெற்று நாக்பூர் தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் பயில்வதற்குத் தேர்வாகியுள்ளார். திருச்சி மிளகுப்பாறை ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி மாணவி தாரணி.

தஞ்சாவூர் மாவட்ட நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு திருச்சி திரும்பிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைக் காண்பதற்குத் திரண்டிருந்த பொதுமக்கள், கழகத் தொண்டர் களுக்கு நடுவே நின்றிருந்தார் ”நான் முதல்வன்” உருவாக்கிய புதுமைப்பெண் ராகிணி.

மாணவியைக் கண்ட முதலமைச்சர் அவர்கள், தனது பேனாவை வழங்கி, பொன்னாடை அணிவித்து வாழ்த்துகள் கூறி மகிழ்ந்தார்.

“புதுமை pen” பெற்ற ”புதுமைப் பெண்” ராகிணியின் கல்விப்பயணம் மிகச்சரியான இலக்கை எட்டி, பல வெற்றிகளைக் குவிக்க வாழ்த்துகள்.”

இவ்வாறு அப்பதிவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.

---

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 117வது நாள்!

### அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் வழங்கப்பட்டது!



சென்னை, ஜூன் 17-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 117வது நாள் அம்பத்தூர் கிழக்கு பகுதி - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி, 82 மற்றும் 82’ஆ’ வட்டங்களில் உணவு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 117 ஆம் நாளான - கழகத்தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (16.6.2026) அம்பத்தூர் கிழக்கு பகுதி 1) வட்டம் 82 -20B, பேருந்து நிலையம் அருகில், மேனம்பேடு, சென்னை. 2) வட்டம் 82 ‘ஆ’- கள்ளிகுப்பம் ஆர்ச் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி. கே.மூர்த்தி.எம்.சி, எம். டி.ஆர். நாகராஜ், டி.எஸ். பி.ராஜகோபால் எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர்/கிழக்கு வடக்கு/ தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால் பி.செந்தில்.வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர். டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – பிரபாகரராஜா எம்.எல்.ஏ. தொகுதி நிதியில்

# விருகம்பாக்கம் 128-வது வார்டு மகளிர் பள்ளியில்

# கலையரங்கம் - கலைஞர் நூற்றாண்டு கட்டடம் - உடற்பயிற்சிக் கூடம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன் 17-

விருகம்பாக்கம் 128வது வார்டில் தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., பிரபாகரராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் தொகுதி மேம்பாட்டு நிதியில் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கட்டப்பட்ட கலையரங்கம், கலைஞர் நூற்றாண்டு கட்டடம், உடற்பயிற்சிக் கூடம் ஆகியவற்றை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பகுதிச் செயலாளர் மு.ராசா, கே. கண்ணன், மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விருகம்பாக்கம் 128வது வார்டில் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ஜெயகோபால் கரோடியா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கலையரங்கம் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரராஜா தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.112 இலட்சம் மதிப்பீட்டில் ஜெயகோபால் கரோடியா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் நூற்றாண்டு கட்டிடம். மேயர் திருமதி மேயர் பிரியா அறிவிப்பின்படி மகளிர் உடற்பயிற்சி கூடம் ரூ.38.30 இலட்சத்தில் உள்ளிட்ட புதிய கட்டிடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரராஜா, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் பகுதி கழக செயலாளர்கள் மு. ராசா, கே. கண்ணன், மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன், மாவட்ட துணை செயலாளர் அக்கா வாசுகி பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.டி.கே. தங்கராஜ், பகுதி துணை செயலாளர் நாகராஜ், வட்ட கழக செயலாளர்கள் வி.ஏ. ராஜா, மைக்கேல், பகுதி பொருளாளர் ரஞ்சித்குமார், வட்ட நிர்வாகிகள் தியாகராஜன், நசீர் பாய், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் சசிக்குமார், மாவட்ட மகளிர் அணி தொண்டர் அணி துணை அமைப்பாளர் விஜயகுமார், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பூங்குழலி, இந்திராணி, உள்ளிட்ட கழக நிர்வாகி கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி உயர் அதிகாரிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





விருகம்பாக்கம் 128வது வார்டில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., பிரபாகரராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் தொகுதி மேம்பாட்டு நிதியில் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கட்டப்பட்ட கலையரங்கம், கலைஞர் நூற்றாண்டு கட்டடம், உடற்பயிற்சிக் கூடம் ஆகியவற்றை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பகுதிச் செயலாளர்கள் மு.ராசா, கே.கண்ணன், மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.